# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS.No. 68/2019 நாள். 09.06.2025**

**PW 3 - வைரவேல் த/பெ.துறைராஜ்**

**குறுக்கு விசாரணை பிரதிவாதிகள் தரப்பில்**

நான் B.Com படித்துள்ளேன். எனக்கு வயது 35. ஆவணங்கள் எழுதுவதற்கு உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் எனது உறவினர்கள் அல்ல, எனது சமூகத்தை சேர்ந்தவர்களும் அல்ல. நான் பூதலூர், அச்சாம்பட்டி கிராமத்தை சேர்ந்தவன். பிரதிவாதிகள் எந்த தாலுக்காவை சேர்ந்தவர்கள் என்று எனக்கு தெரியாது. நான் ஈக்வேடாஸ் மைக்ரோ பைனான்ஸ் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தேன். 2016 லிருந்து நான் பிரதிவாதிகளின் ஊருக்கு சென்று வருகிறேன். பிரதிவாதிகளின் பெற்றோர் அல்லது கூடபிறந்தவர்கள் பெயர் தெரியாது. பிரதிவாதிகளின் குழந்தைகள் பெயர் விபரமுமோ, வயதோ மற்றும் உத்தியோகமோ தெரியாது. 2ஆம் பிரதிவாதி எந்த ஊரில் பிறந்தார் என்ற விபரமும் தெரியாது. அவர்கள் குடும்ப வரவு, செலவு விபரம் தெரியாது. பிரதிவாதிகளுக்கு எத்தனை ஏக்கர் நிலம் எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் இருக்கிறது என்ற விபரம் தெரியாது. அவர்களது வீட்டின் கதவு எண் தெரியாது. நான் வேலை பார்த்த நிறுவனங்களில் பிரதிவாதிகள் கடன் எதுவும் வாங்கவில்லை. நான் பிரதிவாதிகள் வீட்டிற்கு சுமார் 5 வருடங்களுக்கு முன்பு போனேன், தேதி ஞாபகமில்லை. நான் அப்போது கடன் வேண்டுமா என்று கேட்க போனேன். அப்போது அவர்கள் கடன் வாங்கவில்லை. அவர்கள் வீட்டில் நல்ல, கெட்ட காரியங்களுக்கு சென்றதில்லை. என்னை அழைத்ததும் இல்லை. பிரதிவாதிகள் எங்கள் வீட்டிற்கு வந்ததும் இல்லை. பிரதிவாதிகள் ஊருக்கும், என் ஊருக்கும் இடையே 15 கி.மீ தொலைவு இருக்கும். அதன் பின்பு அவர்களை பார்க்கும் இடத்தில் ஏற்கனவே அறிமுகமானவர் என்பதால் நலம் விசாரிப்பேன். பணம் கொடுக்கல், வாங்கல் சம்மந்தமாக எதுவும் பேசியது கிடையாது. புரோநோட் எழுதியதாக சொல்லும் தேதிக்கு முன்பு நான் மூக்கப்புடையான்பள்ளம் கிராமத்திற்கு நிறைய முறை சென்றுள்ளேன். வீரமுண்டக்குடிகாடு கிராமத்திற்கு சென்றுள்ளேனா என்றால் இல்லை. வாதி முருகேசன் என்பவரை எனக்கு தெரியாது. சாட்சிகள் சிங்காரவேலு, ராஜா ஆகியோரை புரோநோட் எழுதும் தேதிக்கு முன்பு அவர்களை எனக்கு தெரியாது. வாதி முருகேசனுடைய வருமானம் வரவு, செலவுகள் பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் ஊருக்கு தெற்கே முதுகுளம் என்ற ஊர் உள்ளது, வடக்கே ஏழுப்பட்டி உள்ளது. நான் சொல்வது தவறு என்றும், எனக்கு அந்த ஊர் பற்றிய விபரம் தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. வாதி பணம் கொடுப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு

பிரதிவாதிகளிடம் நான் லோன் வேண்டுமா என்று கேட்டேன். அதுக்கு அவர்கள் வேறு இடத்தில் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாக சொன்னார்கள். குருங்குளம் என்ற கிராமம் பெரிய ஊர் என்று சொன்னால் சரிதான். அங்கு படித்த இளைஞர்கள் அதிகம் உள்ளனர் என்றால் அதுபற்றி தெரியாது. பிரதிவாதிகளின் எந்த செல்போன் எண்ணுக்கு போன் செய்து பேசினேன் என்று எனக்கு தற்போது ஞாபகத்தில் இல்லை, நான் அதை செல்போனில் பதிவு செய்துள்ளேன். எனது ஆதார் எண், வாக்காளர் அடையாள அட்டை எண் ஆகியவை தெரியாது. சுனாமி புயல் மற்றும் கஜா புயல் எப்போது வந்தது என்று தேதி தெரியாது. நான் வாதியை தவிர வேறு தனிநபர் யாருக்கும் புரோநோட்டோ, வேறு எந்த ஆவணங்களும் எழுதி கொடுத்தது கிடையாது. நான் எழுதிய புரோநோட் ஆவணம் எத்தனை பக்கங்களை கொண்டது என்று தற்போது ஞாபகமில்லை பார்த்தால்தான் தெரியும். நான் எழுதிய புரோநோட் ஆவணம் பச்சை வண்ண பேப்பரில் எழுதப்பட்டது. அந்த பேப்பரை நான் கொண்டு செல்லவில்லை. நான் புரோநோட் எழுத மாலை 3 மணிக்கு சென்றேன், 3 1/4க்குள் எழுதிவிட்டேன், சுமார் கால் மணிநேரம் ஆனது. புரோநோட்டில் பிரதிவாதியின் முகவரி என்ன எழுதப்பட்டிருக்கிறது என்றால் நான்தான் எழுதினேன் அவர்களது ஆதார் அட்டையை பார்த்து எழுதினேன். 1ஆம் பிரதிவாதி என்ன Initial போட்டார் என்று ஞாபகமில்லை. புரோநோட்டில் உள்ள விபரங்களை பொறுத்து அதனை பார்க்காமல் என்னால் விபரம் சொல்லமுடியாது. பிரதிவாதிகள் இருவரும் தமிழில் தான் கையொப்பம் போட்டார்கள், சாட்சிகளும் தமிழில் தான் கையொப்பம் இட்டார்கள். இரண்டு சாட்சிகளில் ஒருவர் ஏற்கனவே அங்கு இருந்தார், மற்றொருவல் கால் மணிநேரம் கழித்துான் அங்கு வந்தார், அவர் பெயர் ஞாபகமில்லை. நான் புரோநோட் எழுதுவதற்காக சென்று கால்மணிநேரம் கழித்து அந்தசாட்சி வந்தார். நான் வாதியிடமிருந்து பிரதிவாதிகள் பணம் வாங்கியதை நேரடியாக நான் பார்க்கவில்லை. பிரதிவாதிகள் வாதி வீட்டிற்கு எத்தனை மணிக்கு சென்றார் என்று தெரியாது. வாதி முருகேசன் வீட்டிற்கு அன்றுதான் முதன்முறையாக சென்றேன். பக்குமணி என்பவரின் பேத்தியை நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஏற்கனவே வல்லம் மற்றும் தஞ்சாவூரில் பிரதிவாதிகளை நான் பார்த்ததாக கூறியுள்ளது அவர்களை கடைத்தெருவில் பார்த்ததை கூறியுள்ளேன். வல்லத்தில் எந்த தேதியில் பார்த்தேன் என்று தெரியாது. நான் ஏற்கனவே தஞ்சை பல்கலை கழக காவல்நிலையத்தில் பிரதிவாதிகளை பார்த்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே பக்குமணிக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே பணம் கொக்கல், வாங்கல் பிரச்சனையில் பல்கலை கழக காவல்நிலையம் சென்றபோது நானும் அங்கு இருந்தேன் என்றால் சரியல்ல. பக்குமணி என்பவருக்கும், பிரதிவாதிகளுக்கும் இருக்கும் பிரச்சனை குறித்து எனக்கு

தெரியாது. மூக்கப்புடையான்பள்ளம் கிராமத்திற்கு பிரதிவாதிகள் அழைத்தன் பேரில் சென்றதாக நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வாதி முருகேசனிடம் கடன் பெறவில்லை என்றும், புரோநோட் எழுதுவதற்காக என்னை அழைக்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதற்கான அவர்களுக்கு எந்த அவசியமும் இல்லை என்றால் சரியல்ல. எதற்காக கடன் வாங்கி என்ன செலவு செய்தார்கள் என்ற விபரமும் தெரியாது. நான் சொல்வது போல் பிரதிவாதிகள் முன்னிலையிலோ, சாட்சிகள் முன்னிலையிலோ புரோநோட் எதுவும் எழுதவில்லை என்றும் புரோநோட்டில் உள்ளது பிரதிவாதிகளின் கையொப்பமே அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் எனக்கோ, வாதி முருகேசனுக்கோ அறிமுகமானவர் அல்ல என்றால் சரியல்ல. பக்குமணி என்பவர் வாதியை பயன்படுத்தி மோசடியான புரோநோட் தயாரித்துள்ளார் என்றும் நான் அதற்கு உடைந்தயாக இருந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் முருகேசனிடமிருந்து பணம் வாங்கி வைத்திருந்தார்கள் நான் அதை எண்ணி பார்த்தேன் என்று கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- V.S.குமரேசன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.